

நீலகிரி மாவட்டம் உதகை சேரிங்கிராஸ், தோட்டக்கலைத்துறை கூட்டரங்கில், மாவட்ட தொழில் மையம், மகளிர் திட்டம், தாட்கோ, ஆவின், தோட்டக்கலைத்துறை, வாழ்ந்துக்காட்டுவோம் திட்டம், மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் அனைத்து துறை சார்ந்த கடன் வழங்குதல் மற்றும் கடன் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாமில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா முன்னிலையில் 07.09.2023 அன்று 136 பயனாளிகளுக்கு ரூ.11.81 கோடி மதிப்பில் பல்வேறு கடன் உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, ஆவின் பொது மேலாளர் ஜெயராமன், மாவட்ட தொழில் மைய மேலாளர் சண்முகசிவா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சசிகுமார் சக்கரபாணி உட்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில், சேமிப்பு கிடங்கினை திறந்து வைத்து, மானியவிலையில் பவர் டில்லர் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், எரிச்சி சிதம்பரவிடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்று விவசாயிகளுக்கு பவர் டில்லர் இயந்திரங்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், வேளாண் இணை இயக்குநர் பெரியசாமி, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையின் புதுக்கோட்டை விற்பனைக் குழு செயலாளர் திருமதி.மல்லிகா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# நாடாளுமன்றத் தேர்தலில் கண் துஞ்சாது கழகப் பணியாற்றிடுவோம்!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் பங்கேற்ற சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப்.10- 'நாளையே தேர்தல்; நாற்பதும் நமதே நாடும் நமதே' என்ற கழகத் தலைவரின் கரங்களுக்கு வலுசேர்க்க கண் துஞ்சாது கழகப் பணியாற்றிடுவோம்' என்று தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைபபிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அது பற்றிய விவரம் வருமாறு:-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட & மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம்

07.09.2023 அன்று சென்னை இராயப் பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் சிறு பான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர். அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக பொதுச்செயலாளர்; நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன், கழக துணை பொதுச்செயலாளர்; அணி பொறுப்பாளர் அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ். மஸ்தான், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு மற்றும் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில துணைச் செயலாளர்கள் அன்வர் கான், நூருல்லா, விஜகுமார், ஷேக் அப்துல்லா, அடையாறு ஷபீல், ஜோசப் ராஜ், முனவர்ஜான், ரஃபி அகமது மற்றும் நாகை மு.ஷாகுல் அமீது ஆகியோர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில், மறைந்த கழக முன்னோடிகளுக்கு இரங்கல் தெரிவித்தல், சிறுபான்மையின மக்களின் நலன் காக்க நாளும் உழைக்கும் முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களுக்கும், கழக இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி அறிவித்தல், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் செயல்பாடுகளை திறம்பட ஒருங்கிணைத்திட அணி சார்பாக தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கழகத்தின் பவள விழாவினை ஆண்டு முழுவதும் மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடிட கழக மாவட்டங்கள் 10 மண்டலங்களாக பிரித்திட்டும், தலைமைக் கழக ஒப்புதலுடன் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் பகுதி, வட்ட, நகர, ஒன்றிய பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டுமெனவும், அணியின் அனைத்து நிலைகளிலும் பெண்களை நிர்வாகிகளாக பங்கெடுக்கச் செய்தல், கழக பவள விழா இளைஞரணி மாநாடு ஆகியவற்றில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பாக முழு முனைப்புடன் பங்கேற்பது மற்றும் 'நாற்பதும் நமதே நாடும் நமதே' என்ற தலைவரின் இலட்சிய கொள்கைக்கு வலு சேர்க்கும் நோக்குடன் செயல்பட்டு இந்தியா கூட்டணியின் வெற்றிக் கரங்களுக்கு உழைத்திட வேண்டுமென்ற பல முக்கிய தீர்மானங்கள் கழக பொதுச்செயலாளர் துரை முருகன் அவர்களின் முன்னிலையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இதில், தமிழ்நாடு முழுவதிலும் இருந்து கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் திரளாக பங்கேற்றனர்.

# திருச்சியில் ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மண்டல ஆலோசனைக் கூட்டம்

திருச்சி, செப். 10- திருச்சி தில்லைநகர் சாஸ்திரி சாலையில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் மாநில ஆதிதிராவிட நலக் குழுவின் மண்டல ஆலோசனை கூட்டம் மாநில ஆதிதிராவிட நலக் குழு செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான கிருஷ்ணசாமி தலைமையில் திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி முன்னிலையில் இன்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது என்றும் மாவட்டம் தோறும் கருத்தரங்கம், பொதுக்கூட்டங்கள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்ய வேண்டும், வருகின்ற 2024 பாராளுமன்ற தேர்தலையொட்டி திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அரசு நலத்திட்டங்கள் மற்றும் பல்வேறு சாதனைகள் குறித்தும் தற்போதையிலிருந்து வீடு வீடாக, வீதி வீதியாக சென்று திண்ணை பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும் என உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த மண்டல கூட்டத்தில் திருச்சி, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் மாநகர செயலாளரும் மாநகராட்சி மேயருமான அன்பழகன்,திருச்சி மண்டல பொறுப்பாளர் வரகூர் துரைசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் இரண்டு நாட்கள் நடைபெறும் மாவட்ட அளவிலான தடகளப் போட்டியை போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தொடங்கி வைத்தார். இவ்விழாவில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, தவ.பாஞ்சாலன், சக்தி ராமசாமி, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், டாக்டர் சலீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தேனி மாவட்டத்தில்

# ரூ. 1.11 கோடியில் துணை சுகாதார நிலைய கட்டிடங்கள்!

## அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தனர்!

தேனி,செப்.10- தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டத்திற்குட்பட்ட டொம்புச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வட்டார பொது சுகாதார அலகு கட்டடம் மற்றும் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் ஜங்கால்பட்டி மற்றும் ரூ.41 இலட்சம் மதிப்பீட்டில் கொட்டக்குடி ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலைய கட்டடங்கள் என மொத்தம் ரூ.1.11 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 புதிய மருத்துவ கட்டடங்களை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா,, பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் 07.09.2023 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து கொண்டு அதற்கு ஏற்ற திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். இந்தியாவில் தமிழ்நாடு சுகாதாரத்துறை முதன்மையாக விளங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலும், ஆலோசனைகளுமே முக்கிய காரணமாக உள்ளது. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் மூலம் பொது மக்களின் இருப்பிடங்களுக்கே சென்று மருத்துவ சேவையாற்றி வருகிறது. மேலும், மருத்துவக் கட்டமைப்பை நவீனமயமாக்கவும், தரம் உயர்த்தி மேம்படுத்தவும் பல்வேறு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி வருடத்திற்கு 10,000 கி.மீ அத்தியவசியமான சாலையினை ஊரக வளர்ச்சித்துறை மூலம் மேம்படுத்த பணிகள் நடைபெற்று வருகிறது என்றும்,

தேனி அரண்மனைபுதூர் நடை பயிற்சி தளத்தினை போன்று போடிநாயக்கனூர், பெரியகுளம், கம்பம், ஆண்டிபட்டி ஆகிய பகுதிகளிலும் நடை பயிற்சி தளம் உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தேனி மாவட்ட மக்கள் தமிழகத்தில் உடல் ஆரோக்கியத்தில் தலைசிறந்தவர்களாக இருப்பதற்கு காரணம் இப்பகுதியில் இயற்கையாகவே எதிர்ப்பு சக்தி அதிகமாகவும் சுகாதாரமான காற்றும் காரணமாக உள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறது. தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருதுகள் (National Quality Assurance Standard Certificate) 2013 இல் இருந்து நடைமுறையில் இருக்கிறது. இதுவரை தமிழ்நாடு ஒட்டு மொத்தமாக 478 சான்றிதழ்களை பெற்றிருக்கின்றது. இதில் கடந்த ஆண்டு மட்டும் 239 சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. இந்த வருடம் தேனி மாவட்டத்தில் கம்பம் அரசு மருத்துவமனை, சில மலை ஆரம்ப சுகாதார நிலைம், மற்றும் கூடலூர், ஓடைப்பட்டி சமுதாய சுகாதார நிலையங்களுக்கு கிடைத்திருப்பது பாராட்டிற்குரியது.

மேலும், மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட (Labour Room Quality Improvement Initiative) சான்றிதழ்கள் தமிழகத்திற்கு இதுவரை 77 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. அதில் இந்த வருடம் மட்டும் 43 சான்றிதழ்கள் பெரும் அளவிற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் கம்பம் அரசு மருத்துவமனைக்கு இந்த சான்றிதழ் கிடைத்திருப்பது பெருமைக்கரியது.

தேனி மாவட்டத்தில் மருத்துவ கல்லூரி மருத்துவமனை, 3 வட்டார மருத்துவமனை, 2 வட்டம் சாரா மருத்துவமனை, 1 மாவட்ட தலைமை மருத்துவமனை, 41 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 192 துணை சுகாதார நிலையங்கள் என தேனி மாவட்டத்திற்கு தேவையான அனைத்து மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இதனை மேம்படுத்துவதற்காக அரண்மனைபுதூர் பகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பில் ஊரக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தேனி மாவட்டத்திற்கு தேவையான அனைத்து வசதிகளும் தமிழ்நாடு முதல்வர் தலைமையிலான அரசு ஏற்படுத்தி தருவதற்கு தயாராக உள்ளது என தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 22.08.2023 அன்று 7 கோடியே 33 இலட்சம் மதிப்பீட்டில் தேனி மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் 50 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனையை (Integrated Ayush 50 Bedded Hospital) காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

இந்த மருத்துவமனையில் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, யோகா, இயற்கை மருத்துவம் போன்ற பல்வேறு இந்திய மருத்துவ முறைகளுக்கு சிகிச்சை அளித்து தேனி மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாக திகழ்கிறது.

அதேபோல் 06.06.2023 அன்று தேனி நகராட்சியில் 2 போடிநாயக்கனூர் நகராட்சியில் 1 மற்றும் கம்பம் நகராட்சியில் 1 என மொத்தம் 4 நகர்ப்புற நல்வாழ்வு மையங்களை தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். மேலும் சின்னமனூர், பெரியகுளம் ஆகிய பகுதிகளில் மருத்துவமனைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் முடிந்தவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்க உள்ளார்கள் என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி இரா.ஜெயபாரதி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் திருமதி க.ப்ரீதா, துணை தலைவர் ராஜபாண்டியன், ஊராட்சி ஒன்றிக்குழு தலைவர்கள் சக்கரவர்த்தி(தேனி), போடிநாயக்கனூர் நகர்மன்ற தலைவர் திருமதி ராஜராஜேஸ்வரி சங்கர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லெட்சுமணன், உள்ளிட்ட பேரூராட்சி தலைவர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

